

# என்று தீருமோ இந்த அவலம்!

**பி**ச்சை எடுப்பது சட்டப்படி குற்றம் என்று தெரிந்தும் சாலைகளில் நின்று பிச்சை எடுக்கும் சிறுவர், சிறுமிகள் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. தமிழகத்திலுள்ள பெருநகரங்களில் பிச்சை எடுப்போர் பெருமளவில் உள்ளனர். என்றாலும் சென்னை, கடலூர் போன்ற நகரங்களில் பிச்சை எடுப்போர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

10 முதல் 12 வயது சிறுவர் சிறுமியரும், குழந்தைகளைத் தூக்கி வைத்துக்கொண்டு பெண்களும் சாலையோரங்கள், உணவகங்கள் மற்றும் வணிக நிறுவனங்களின் முன் பிச்சை கேட்பதைக் காண முடிகிறது.

பிச்சை எடுப்பது ஒரு சமூகப் பிரச்சனை. பிச்சை எடுத்துத்தான் உயிர் வாழவேண்டிய நிலை. மனிதர்களுக்கு என்றால், அவர்களைப் படைத்த இறைவன் கெடுக' என்ற உயரிய சிந்தனை கொண்ட மேதைகள் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளனர். அவர்கள் வாழ்ந்த நாட்டில், பிச்சைக்காரர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இச்சமூகத்தின் எண்ணத்தில், செயல்பாட்டில் எங்கோ பிரச்னை இருப்பதாகவே எண்ணத்தோன்றுகிறது.

திட்டங்களையும் சட்டங்களையும் நிறைவேற்றும் அரசுகளின் செயல்பாடுகளில் உள்ள கோளாறுதான் இந்த அவலங்களுக்கெல்லாம் காரணம். வேலைவாய்ப்பு இன்மை, வறுமை, பெற்றோர், உறவினர்களின் பராமரிப்பு இன்மை, கடமையை உணராமை போன்ற சமூகப் பிரச்னைகளே பிச்சை எடுக்கும் நிலைக்கு சிறுவர்களைத் தள்ளி விடுகின்றன.